தினமலர்

உண்மையின் உரைகல்

# 15 June 2015

## சுகாதாரத்துறையில் வேலைவாய்ப்பு அளிக்கும் கல்வி ஆலோசனை

சங்கர நேத்ராலாயா அகாடமி சார்பில் அறிவியல் பிரிவில் +2 முடித்த மாணவர்களுக்கு சுகாதாரத்துறையில் வேலைவாய்ப்பு அளிக்கும்

கல்வி ஆலோசனை முகாம் அம்பத்தாரில் 13.06.2015 அன்று நடந்தது. இதில் பேசிய சங்கர நேத்ராலயா அகாடமியின் துணை பதிவாளர் அ மகாலிங்கம்.

### '42 சதவீதம் பேருக்கு பார்வை குறைபாடு'



அம்பத்துாரில் நடந்த கல்வி ஆலோசனை நிகழ்ச்சியில், பிளஸ் 2 முடித்த மாணவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கிய, சங்கரா நேத்ராலயா அகாடமியின் துணை பதிவாளர் மகாலிங்கம்.

அம்பத்துார், ஜூன் 15–

"நம் நாட்டில் 42 சதவீதம் பேருக்கு பார்வை குறைபாடு உள்ளது," என, சங்கரா நேத்ராலயா அகாடமியின் துணை பதிவாளர் மகாலிங்கம் பேசினார்.

அம்பத்துாரில் நடந்த, சங்கரா நேத்ராலயாவின் கல்வி ஆலோசனை நிகழ்ச்சியில், பிளஸ் 2 முடித்த ஏராளமான மாணவர்கள் கலந்துகொண்டனர்.

சென்னை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின், கல்வி பிரிவான சங்கரா நேத்ராலயா அகாடமி சார்பில், கல்வி ஆலோசனை நிகழ்ச்சி நேற்று, முன்தினம் அம்பத்துாரில் நடந்தது.

நிகழ்ச்சியை துவக்கி வைத்து, சங்கரா நேத்ராலயா அகாடமியின் துணை பதிவாளர் மகாலிங்கம் பேசியதாவது:

உலகத்தில் பார்வையிழப்பு எனும் சுமையை மிக அதிக அளவில் தாங்கிக் கொண்டிருக்கும் தேசம் நம் தேசம். 120 கோடி மக்கள் தொகை கொண்ட நம் தேசத்தில், பார்வை குறைபாடு உடைய மக்கள் 42 சதவீதம். தங்களுக்கு பார்வை குறைபாடு இருப்பதை அறியாமல் இருப்பது தான் அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது.

அறிவியல், தகவல் தொழில் நுட்பம் என்று மனிதனின் கற்றுக்கொள்ளும் செயல்பாட்டிலும், மனிதனின் கண்கள் 80 சதவீதம் முக்கிய பங்கு வகிக்கிறது. அந்த வகையில் கண் மருத்துவத்தில் வேலைவாய்ப்புகள் கொட்டிக்கிடக்கின்றன என்பதில் சந்தேகம் இல்லை.

எங்கள் கல்லுாரியில் கண் மருத்துவம் சார்ந்த படிப்புகள் கற்று கொடுக்கப்படுகின்றன. சங்கரா நேத்ராலயா அகாடமியில் தகுதியும், திறமையும் வாய்ந்த ஏழை, எளிய மற்றும் வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகையும் வழங்கப்படுகிறது.

இவ்வாறு, மகாலிங்கம் பேசினார்.

மேலும், கல்வி நிறுவனம் குறித்த விவரங்களுக்கு www.thesnacademy.ac.in என்ற வலைதளத்தையோ அல்லது mahali@snmail.org என்ற மின்னஞ்சல் முகவரியையோ தொடர்பு கொண்டு விவரங்களை அறிந்து கொள்ளலாம் என, கல்வி ஆலோசனை முகாமில் தெரிவிக்கப்பட்டது.